மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் வருவதை வைத்துக் கொண்டு, எழுத்துமூலமாகத் தராமல் அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு உங்களுக்குப் பதில் சொல்ல முடியாது; இயலாது. பத்திரிகைகள் பலவகைகள், பல எண்ணங்களை வெளியிடலாம், அதில் நான் குறுக்கிட முடியாது. ஆனால் எழுத்து மூலமாக ஏதாவது ஒரு விதியின்கீழ் இருக்கிறது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொண்டு பரிசீலனை செய்ய எனக்கு உரிமை இருக்கிறது. நீங்கள் அன்று அப் பிரச்னைபற்றி எழுப்பிய நேரத்தில், முதல் அமைச்சர் அவர்கள் இருக்கும்போது எழுப்பினால் அவர்கள் கருத்தை நன்கு இந்த அவை அறிந்துகொள்ள முடியும் என்று சொன்னேன். அவர்கள் வருகிறவரை நான் அவையின் சார்பில் எதையும் சொல்ல இயலாது.

(ஆ) வேலைநீக்கம் செய்யப்பெற்ற போலீசார் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பெறுவது குறித்து.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, போலீசார் சங்கம் வைக்க வேண்டுமென்று கோரி போராட்டம் நடந்து 76, 77க்கு மேற்பட்டவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் சட்டப் பேரவை உறுப்பினர்; வழக்கறிஞர். இப்போது பொது விவாதம் நடந்து கொண்டிருக்கின்றது. உங்களுடைய கருத்து வந்துவிட்டது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக வெளியே பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவார்களா என்பது விசாரணையில் இருக்கிறது. எனவே, அரசு அறிக்கை வைக்கத் தயாரா என்பது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் திரு. ரகுமான்கான் பிரச்னையைப் பற்றிச் சொல்கிறேன். அது இப்போதைக்கு முடிகின்ற விவகாரம் அல்ல. நீண்டகாலமாக இருக்கின்ற பிரச்னை இரண்டு நாட்களுக்குப் பிறகு முதல் அமைச்சர் அவர்கள் நன்றி உரைக்கு பதில் அளிக்கின்றபோது இதுபற்றி எழுப்பலாம், அவரது கவனத்திற்குக் கொண்டு வரலாம். இன்றைக்கு இது அவசரமான, முக்கியமான பிரசனை அல்ல. எனவே, இது ஒழுங்கு பிரச்னை இல்லை. அமருங்கள். திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே.

* *

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது

1980 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தைகளை திரும்பப் பெற வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : வாபஸ் வாங்குகிறேன். நம் முடைய முதல்வரைப் பற்றி ஏன் இப்படிப் பேசுகிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி பேசியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(இ) உறுப்பினரது திருத்தங்கள் தள்ளப்பெற்றுள்ளது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்களுடைய செயலகத்திலிருந்து தாங்கள் பிறப்பித்திருந்த ஒரு ஆணை இப்போது என் கைக்குக் கிடைத்திருக்கிறது. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் சில திருத்தங்களைக் கொடுத்திருந்தேன். அந்தத் திருத்தங்களில் சிலவற்றை தாங்கள் தள்ளியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் நீண்ட நாட்களாக உறுப்பினராக இருக்கிறீர்கள். நான் டிஸ் அலவ் செய்ததை இங்கே எழுப்பக்கூடாது. அதைப்பற்றி பேசக்கூடாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தாங்கள் உத்தரவிட்டது இப்போது தான் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. என்னுடைய திருத்தம், * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அந்த வாசகத்தை எடுத்துவிட வேண்டும். அதைச் சொல்லக் கூடாது. அது தங்களுக்குத் தெரியாதது அல்ல.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் சீதாபதி கல்லூரியிலும், திருச்சியில் செயின்ட் ஜோசப் கல்லூரியிலும்....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.